# பாக்ஸோ சட்டம் 2012 - சிறப்பு அம்சங்கள்

குழந்தைகளை பாலியல் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட குழந்தையோ அல்லது அவரது பாதுகாவலரோ சிறப்பு இளவர் காவல் அலகில் அல்லது சம்பந்தப்பட்ட எல்லையில் உள்ள காவல் நிலையத்தில் புகார் அளிக்கலாம்.

a. பாதிக்கப்பட்ட குழந்தையின் விவரத்தை எக்காரணத்தைக் கொண்டும் எந்த விதத்திலும் வெளியிடக்கூடாது குறிப்பாக அச்சு ஊடகத்திலோ அல்லது மின்னணு ஊடகத்திலோ வெளியிடுதல் கூடாது.

b. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தொந்தரவு சம்பந்தப்பட்ட புகார் பற்றிய விவரத்தை தெரிவிக்காமல் மறைக்கும் நபருக்கோ அல்லது சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்திற்கும் சிறைதண்டனை வழங்க சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

c. ஒரு குழந்தை பாலியல் தொந்தரவுக்கு ஆளாகாமலேயே ஆளாகி விட்டதாக தெரிந்தே ஒரு பொய் புகார் கொடுக்கும் நபருக்கும் சிறை தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

d. பாலியல் தொந்தரவுக்கு ஆளான குழந்தைகளை பொறுத்து அவர்களுடைய மருத்துவ பரிசோதனையானது அவர்களது பெற்றோர் அல்லது அந்த குழந்தைக்கு நம்பகத்தன்மையான யாராவது ஒரு பாதுகாவலர் அல்லது உறவினர் முன்னிலையில்தான் அந்த மருத்துவ பரிசோதனை செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்டது ஒரு பெண் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் கட்டாயமாக பெண் மருத்துவர் மட்டும்தான் அந்த பெண்குழந்தையை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

e. குற்றம் சுமத்தப்பட்ட நபர் குற்ற மனதுடன் தான் செயல்பட்டு இருக்கிறார் என்பதாக நீதிமன்றம் அனுமானம் கொள்ள வேண்டும். மாறாக அந்த அனுமானம் தவறானது என்பதை மெய்ப்பிக்க வேண்டியது குற்றம் சாட்டப்பட்டவரின் பொறுப்பாகும்.

**<u>பாக்சோ சட்டம் 2012ன் படி சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணை சம்பந்தப்பட்ட சிறப்பு அம்சங்கள்.</u>**

a. பாக்ஸோ சட்டம் 2012 இல் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை விசாரிப்பதற்கு என்று எந்த ஒரு நீதிமன்றம் நியமனம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நீதிமன்றம் சிறப்பு நீதிமன்றம் ஆகும்.

b. அந்த சிறப்பு நீதிமன்றம் குழந்தைகளுக்கு எதிரான அனைத்து பாலியல் குற்றங்களையும் விசாரிக்க அதிகாரம் கொண்டது மற்றும் இணையதளம் வழியாக குழந்தையை பாலியல் தொந்தரவுக்கு ஆளாக்கும் குற்றத்தையும் விசாரிக்க அதிகாரம் கொண்டதாகும். மேலும் இந்த சிறப்பு நீதிமன்றத்திற்கு அமர்வு நீதிமன்றத்தின் அதிகாரங்களும் உண்டு.

c. சிறப்பு நீதிமன்றத்தின் முன்பாக நடத்தப்படும் அனைத்து வழக்கு விசாரணைகளும் நீதிபதியின் தனி அறையில் அல்லது மறைவுக்கு உட்படுத்தப்பட்ட உள்ளறையில் மட்டுமேதான் நடத்தப்பட வேண்டும். தேவைப்பட்டால் சிறப்பு நீதிமன்றம் ஒரு ஆணையரை நியமித்து குழந்தை இருக்கும் இடத்தில் வைத்தே குழந்தையை விசாரிக்கலாம்.

d. சாட்சி விசாரணை நடைபெறும் சமயத்தில் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்ட நபரை அல்லது எதிரியை பார்க்காத வண்ணம் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறதா என்பதை சிறப்பு நீதிமன்றம் உறுதி செய்து கொள்ள வேண்டும். அதேசமயம் சாட்சி மொழிக்கும் குழந்தையின் குரல் எதிரி கேட்கும் வகையில் ஒரு திரை அல்லது ஒருபுறம் மட்டும் தெரியக்கூடிய கண்ணாடியின் பின்புறமாக எதிரி இருக்கும் வகையில் சிறப்பு ஏற்பாடு செய்து வைக்கப்பட வேண்டும்.

e. பாதிக்கப்பட்ட குழந்தை அல்லது அந்த குழந்தையின் பாதுகாவலர் தங்களுக்கு விருப்பப்பட்ட ஒரு வழக்கறிஞரை வழக்கு விசாரணையின் போது அவர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு அமைத்துக் கொள்ள சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வழக்கறிஞர்

வைத்துக் கொள்ள விரும்பும் பாதிக்கப்பட்ட குழந்தை அல்லது அவரது பாதுகாவலருக்கு உரிய பொருள் வசதி இல்லாத பட்சத்தில் சட்ட உதவி ஆணையத்தின் மூலமாக இலவசமாக வழக்கறிஞர் நியமித்து தரப்பட வேண்டும்.

f. வழக்கு விசாரணையின் போது தேவைப்படும் பட்சத்தில் ஒரு நிபுணர் அல்லது மொழிபெயர்ப்பாளர் ஆகியோரை சிறப்பு நீதிமன்றம் நியமனம் செய்து கொள்ளலாம். உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ பாதிக்கப்பட்ட குழந்தையை பொறுத்து வழக்கு விசாரணையின் போது அதற்குரிய சிறப்பு பயிற்றுனரை நியமித்துக் கொள்ளவும் சிறப்பு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

g. சாட்சி விசாரணை என்பது சிறப்பு அரசு வழக்கறிஞர் ஆகட்டும் அல்லது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆகட்டும் பாதிக்கப்பட்ட குழந்தை இடம் நேரடியாக எந்த கேள்வியும் கேட்கக் கூடாது. மாறாக அவர்கள் கேட்கும் கேள்விகள் சிறப்புநீதிமன்றத்திடம் தெரிவித்து அந்த கேள்வியை சிறப்பு நீதிமன்றம் மட்டும்தான் பாதிக்கப்பட்ட குழந்தைடயிம் கேட்க வேண்டும்.

h. வழக்கு விசாரணை நடைபெறும் சமயத்தில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட சாட்சியமளிக்கும் குழந்தைக்கு அடிக்கடி இடைவெளி வழங்க சிறப்புநீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

i. பாதிக்கப்பட்ட குழந்தையை சாட்சி விசாரணை செய்யும் சமயத்தில் அந்த குழந்தையை நட்பு ரீதியாக அணுகும் பொருட்டு அந்த சூழலை குழந்தைக்கு ஏதுவாக சிறப்பு நீதிமன்றம் அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அந்த பாதிக்கப்பட்ட குழந்தை நம்பிக்கை வைத்துள்ள அந்த பாதிக்கப்பட்ட குழந்தையின் குடும்ப உறுப்பினர் அல்லது பாதுகாவலர் அல்லது உறவினர் யாரேனும் நீதிமன்ற அறையில் இருக்க அனுமதி வழங்க சிறப்பு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

j. பாதிக்கப்பட்ட குழந்தையை சாட்சி விசாரணைக்காக என்று அடிக்கடி நீதிமன்றத்திற்கு வரவழைத்தல் கூடாது.

k. பாதிக்கப்பட்ட குழந்தை சாட்சியம் அளிக்கும் போது அந்த பாதிக்கப்பட்ட குழந்தையை பாதிக்கக்கூடிய வகையிலான கடுமையான கேள்விகளையோ அல்லது குழந்தையின் நடத்தையை தாழ்மைப்படுத்தும் வகையிலான கேள்விகளையோ கேட்க சிறப்பு நீதிமன்றம் அனுமதிக்கவே கூடாது.

l. பாதிக்கப்பட்ட குழந்தையின் விவரங்களை எக்காரணத்தைக் கொண்டும் வெளியிடக்கூடாது. ஆனால் அவ்வாறு வெளியிடுவது குழந்தை நலனுக்கு உகந்தது என சிறப்பு நீதிமன்றம் கருதினால் மட்டுமே அவ்வாறு குழந்தையின் விபரத்தை வெளியிட அனுமதிக்கலாம்.

**பாக்சோ சட்டம் 2012 பற்றிய விழிப்புணர்வை அனைத்து தரப்பினருக்கும் பொதுமக்களுக்கும் குழந்தைகளுக்கும் தொலைக்காட்சிகள், வானொலிகள், மற்றும் அச்சு ஊடகங்கள் ஆகியவற்றின் மூலமாக அவ்வப்போது சீரிய இடைவெளியில் ஏற்படுத்த இந்த சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

*****

தொகுப்பு
ZARA LAW ASSOCIATES
A.K.A. ரஹ்மான், B.A.B.L., M.A., LLM., P.G.D.F.D.R.,
மாவட்ட நீதிபதி ( பணி ஓய்வு)
வழக்கறிஞர், மதராஸ் உயர் நீதிமன்றம்,
Cell: 96773 20907 Email: akarahmaan2025@gmail.com